[1978 பிப்ரவரி 25

Kundha Hydro Electric Project.

* 265 Q.—THIRU J. S. SADIQ PASHA : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that there is considerable delay in the commissioning of third and fourth units of the fourth stage of the Kundha Hydro Electric Project ;

(*b*) if so, the reasons for the delay ; and

(*c*) the steps taken thereon ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஓரளவு தாமதம் ஏற்பட்டிருக்கிறது.

(ஆ) கனடாவிலிருந்து வரவேண்டிய சில முக்கியமான துணைக்கருவிகளும், உறுப்புகளும், ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட காலவரையறைப்படி வந்துசேரவில்லை. மேலும் நிறுவுதல் பணிகளின் மேற்பார்வையாளர்கள் கனடாவில் இருந்து வந்து சேருவதற்கும் காலதாமதமாயிற்று.

(இ) தேவையான இயந்திர பாகங்களைத் துரிதமாக அனுப்பிவைக்குமாறும், மின் உற்பத்தி இயந்திரத்தை இயக்கும் வேலைகளை துரிதப்படுத்தும்படியும் கனடியன் ஜெனரல் எலக்டிரிக் கம்பெனி அடிக்கடி கோரப்பட்டது. இன்றைய நிலவரப்படி முக்கியப் பொருட்களெல்லாம் வேலை நடைபெறும் இடத்திற்கு வந்து சேர்ந்துவிட்டன. மின் உற்பத்தி நிலையம் 3-ல் அமைக்கப்பட்ட 60 மெகாவாட் இயந்திரம் 8—2—1978 அன்று கிரிட்டுடன் இணைக்கப்பட்டது. மேலும் சோதனைகள் நடைபெறுகின்றன. மின் உற்பத்தி நிலையம் 4-இல் உள்ள 50 மெகாவாட் இயந்திரம் ஜூலை 1978-ல் இயங்க தொடங்கலாம்.

(திரு. சி. ஆறுமுகம் எழுந்தார் ....).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது நீலகிரி மாவட்டத்திலுள்ள குந்தா திட்டத்தைப் பற்றியது. மதுராந்தகம் தொகுதிக்கு என்ன தொடர்பு என்று தெரியவில்லை, கேட்பதைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. சி, ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இடையில் நான்கு ஆண்டு காலமாக கானடா நாட்டிலிருந்து பொருட்கள்இந்தியாவுக்கு வருவதற்கு தடை இருந்து வந்தது

1978 பிப்ரவரி 25]

இப்போது அந்தத் தடை நீங்கியிருக்கிறதா? இல்லை யென்ருல் நம்முடைய நாட்டிலேயே பெரும்தொழிற்சாலை களில் அப்படி வரவழைக்கவேண்டிய உறுப்புகளை உற்பத்தி செய்வதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இது நாடாளுமன்றத்தில் கேட்கப்பட வேண்டிய கேள்வி. அந்நிய நாட்டிலிருந்து பொருட்கள் வருவதில் ஏற்படுகின்ற தடை குறித்து நாம் ஒன்றும் செய்வதற்கில்லை. கானடா நாட்டைச் சேர்ந்த ஜெனரல் எலக்ட்ரிகல் கம்பெனி யிலிருந்து சில பொருட்கள் தயார் செய்வதற்கும், அவற்றை அனுப்புவதற்கும் சற்று காலதாமதம் ஏற்பட்டது. நம்மைப் பொறுத்தவரையில் காலதாமதம் ஏற்பட்டது என்று சொல்வது சரியல்ல. கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிடு வது அணுமின் நிலையத்தைப்பற்றி என்று நினைக்கிறேன். அதில் சில சிக்கல்கள் இருக்கின்றன.

மின் வாரியத்தில் பணியின்போது விபத்துக்களில் இறந்தவர் கள்.

* 266வினு—திரு.வி.கே.கோதண்டராமன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் வாரியத்தில், கடந்த 3 ஆண்டுகளில் பணி செய்யும்பொழுது விபத்துகளுக்கு உட்பட்டு இறந்த தொழி லாளர்கள் எத்தனை பேர்கள்?.

(ஆ) எந்த திட்டத்தில் அதிகம்?

(இ) இப்படி நிகழாமல் இருக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:—

(அ) மொத்தம் 160 பேர்கள்

(ஆ) 1974-ல்	பைகாரா மின் திட்டம்	10
1975-ல்	திருநெல்வேலி மின்திட்டம்	5
	வேலூர் மின்திட்டம்	5
1976-ல்	சென்னை மின்திட்டம்/பகிர்வு	7

(இ) மின்சார வேலைகளில் ஈடுபடும் தொழிலாளர் களுக்கு தக்க பாதுகாப்பு சாதனங்கள் உபயோகிப்பதன் அவ சியம் குறித்து அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. இதற்